# பழைய ஏற்பாடு ஆய்வு (பாடம்-2)

எபிரெய வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு பிரிவுகள்:-

1. சட்ட புத்தகம் : ஆதியாகமம், யாத்திராகமம், லேவியாகமம், எண்ணாகமம், உபாகமம்
2. தீர்க்கதரிசிகள் : முந்தைய தீர்க்கதரிசிகள் - யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல், இராஜாக்கள்
3. எழுத்துக்கள்
    - பாடல்கள் : யோபு, சங்கீதம், நீதிமொழிகள்
    - சுருள்கள் : ரூத், புலம்பல், எஸ்தர், உன்னதப்பாட்டு, பிரசங்கி
    - சரித்திர ஆகமங்கள் : நாளாகமம், தானியேல், எஸ்றா, நெகேமியா

ஆதியாகமம்

- முழு வேதாகமத்திற்கான முகவுரையான புத்தகம்

இரண்டு பிரிவுகள்

1. ஆரம்ப கால சரித்திரம் 1 – 11 அதிகாரங்கள்
2. முற்பிதாக்களின் சரித்திரம் 12 - 50 அதிகாரங்கள்

## 1.ஆரம்ப கால சரித்திரம்

1. சிருஷ்டிப்பின் வரலாறு

சகலத்தையும், மனிதனையும் தேவனே படைத்தார். சிருஷ்டிப்பில் வாக்குப்பண்ணப்பட்டதையும், தேவனின் விரும்பம் மனிதனின் மேலே இருக்கிறதையும் நாம் காண்கிறோம். சிருஷ்டிப்பின் மணிமகுடம் மனிதனை தேவன் படைத்ததே.

- ஒன்றுமில்லாமையிலிருந்து சகலத்தையும் தேவன் உண்டாக்கினார்.
- மனிதன் வாசம் செய்கிறதற்காக இடத்தையும் தேவன் ஆயத்தம் செய்தார். (ஆதி 1:1 – 2:4)

ஆதியாகமம் 1:1 – 1:2க்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

முதல் ஆராய்ச்சியாளர் “தாமஸ் சேரி மைனஸ்” என்பவர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னே முதலிலேயே தேவன் “வெளிச்சத்தை” உண்டாக்கினார்.

- ❖ நாம் உண்டாக்குவோமாக என்று சொல்லி தேவன் மனிதனை தமது சாயலின்படி தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார்.

ஏதேன்

- ❖ கிழக்கே அமைந்துள்ள பெரிய நிலபரப்பு
- ❖ மனிதனுக்கு வேண்டிய அனைத்து விருட்சங்களும் தோட்டத்தில் இருந்தது.
- ❖ இரண்டு முக்கியமான விருட்சங்கள்
    1. ஜீவ விருட்சம்
    2. நன்மை, தீமை அறியதக்க விருட்சம்
- ❖ நான்கு நதிகள்
- ❖ மனிதனோடு ஐக்கியமான உறவு கொள்ள விரும்பி மனிதனை தேவன் தோட்டத்தில் இருக்க செய்தார்.

ஏதேன் தோட்டத்தில் மனிதனை இருக்க செய்ததற்கான நோக்கம்

1. தேவன் மனிதனோடு உறவு கொள்ள
2. மனிதனுக்கு ஒய்வு, பாதுகாப்பு உண்டாக, நிலத்தை பண்படுத்த, காக்க (பொறுப்பு)
3. கட்டளைக் கைக்கொள்ள

## 2.மனிதனுடைய வீழ்ச்சி

- ❖ ஞானத்தை பெற்றுக்கொள்ளும் ஆசையினால் வீழ்ந்த போயினார்
- ❖ தேவனுடைய நியாயத்தீர்ப்பு
    1. சர்ப்பத்திற்கு
    2. ஸ்திரீக்கு
    3. புருஷனுக்கு
- ❖ முதல் குடும்பம்
  ஆதாம் - ஏவாள் - காயீன், ஆபேல் (பின்பு ஆபேலின் இடத்தில் சேத்)

## 3.ஜலபிரளயம்

நோவாவுக்கு கர்த்தரின் கண்களில் கிருபை கிடைத்ததினால் முழுக்குடும்பமும் காக்கப்பட்டது.

பேழையில்

- ❖ 17,600 வகையிலான ஜீவராசிகள்

- ❖ 45,000 ஆடுகள் ஏற்றக்கூடியதான அளவில் உண்டாக்கப்பட்ட பேழை
- ❖ மொத்தம் 371 நாட்கள் பேழையில் இருந்தனர்

1.நோவாவின் குமாரர்களின் வம்சவரலாறு

1. யாப்பேத் 10:1-5
2. காம் - 10:6-20
3. சேம் - 10:21-32

சேம் வம்சத்தில் இரண்டு பிரிவுகள்

1. பாபேல் கோபுரம் கட்ட முற்பட்டு சிதறப்பட்டவர்களின் பிரிவு
2. ஆபிரகாமை தெரிவு செய்ததான பிரிவு

2.முற்பிதாக்களின் சரித்திரம்

1. ஆபிரகாம்
2. ஈசாக்
3. யாக்கோபு
4. யோசேப்பு

- ❖ ஆபிரகாமின் நாட்களில் இஸ்மவேல் மூலமாக உண்டான சந்ததியையும், யாக்கோபின் நாட்களில் ஏசா மூலம் உண்டான ஏதோம் சந்ததியையும் காண்கின்றோம்.

முற்பிதாக்களின் காலம் (கிமு 2000 – கிமு 1500)

கிமு 2000த்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு சரித்திர ஆதார பூர்வ தகவல்கள் இருக்கின்றன

- ❖ இந்த காலங்களில் பாலஸ்தீனம் நாட்டின் அண்டைய கிழக்க நாடுகளின் சரித்திரமும் கலாச்சாரமும் முற்பிதாக்களோடு இணைந்து வருகிறது.
- ❖ கிமு 2000 இருந்த எமோரியரின் பெயர்கள் முற்பிதாக்கள் வாழ்ந்த நாட்களில் வழங்கப்பட்ட பெயர்களுக்கு ஒத்து வருகின்றன.
- ❖ மெசபதோமியா, கானான் தேசத்தின் சூழ்நிலைகள் மற்றும் பட்டணங்களின் பெயர்களும் ஒத்து வருகின்றன.
- ❖ நாடோடியான வாழ்க்கை முறைகளும் பாரம்பரிய பழக்க வழக்கங்களும் ஒத்து வருகின்றன

ஆபிரகாம்

1. ஆபிரகாமிலிருந்து தேவனுடைய மீட்பின் திட்டம் ஆரம்பமாகிறது.

2. ஆபிரகாமின் அழைப்பில் 3 ஆசீர்வாதங்கள் வாக்குப்பண்ணப்பட்டன.
    - ❖ சந்ததிக்கான ஆசீர்வாதம்
    - ❖ தேசத்தை தருவேன் என்கிற ஆசீர்வாதம்
    - ❖ மனுக்குலத்திற்கான முழுமையான ஆசீர்வாதம்

கேள்விகள்

1. எபிரெய வேதாகமத்தில் பழைய ஏற்பாடு எவ்வாறாக பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அந்தந்த பிரிவுகளில் காணப்படும் புத்தகங்களில் பெயர்களையும் குறிப்பிடுக?
2. ஆதியாகம புத்தகத்தின் தலையான இரண்டு பிரிவுகள் என்னென்ன என்பதையும் அதில் ஆரம்ப கால சரித்திர பிரிவில் காணப்படுகிற சம்பவங்களை தலைப்புவாரியாகவும் கூறுக?
3. தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோடத்தில் இருக்க செய்ததற்கான காரணங்கள் யாவை?
4. மனிதனின் வீழ்ச்சியில் நடைபெற்ற சம்பவங்களை, நோவாவின் பிந்தைய நாட்களில் நடந்த சம்பவங்களோடு ஒப்பிட்டு கூறுக?
5. முற்பிதாக்கள் யார் யார்? அவர்கள் கி.மு.2000த்தில் தான் வாழ்ந்தார்கள் என்பதற்கான சரித்திர ஆதார பூர்வ தகவல்களை கூறுக?
6. தேவன் ஆபிரகாமை அழைக்கும்போது என்னென்ன ஆசீர்வாதங்களை வாக்குதத்தமாக கூறினார்?